விலை: சதம் 75 ★★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 23 கார்த்திகை 5 முஹரம் 21 இதழ் 278

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 20-11-81

## யாழ்ப்பாணத்தில் காலரா அபாயம்!

(ஏ. வி. மாணிக்கம்)

யாழ்ப்பாணத்தில் காலரா நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது!

யாழ். மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதனின் உத்தரவின் பேரில் சுகாதார அதிகாரிகள் நோய் பீடித்துள்ள பகுதிகளில் தடுப்பு நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

வண்ணார்பண்ணை காரைக்கால் ஒழுங்கையில் வசிக்கும் 65 வயதுப் பெண் ஒருவர் காலரா நோயினால் மரணமானார்.

### ஒரு பெண் மரணம்

சுகாதார அதிகாரிகள் முன்னிலையில் இறந்தவரின் சடலம் உடனடியாக மயானத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு எரிக்கப்பட்டதுடன், இப்பகுதியில் நோய் பரவாமல் தடுக்கும் வேலைகளும் மேற்கொள்ளப்பட்டன.

கந்தர்மடம் பழம் வீதியில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேருக்கும் அதே இடத்தைச் சேர்ந்த 8 வயதுப் பிள்ளைக்கும் வாந்திபேதி நோய் கண்டுள்ளது. ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பகுதியிலும் மாநகர சுகாதார அதிகாரிகள் காலரா தடுப்பு நடவடிக்கைகளைத் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பகுதி தொற்றுநோய்ப் பகுதியாகப் பிரகடனம் செய்ய வேண்டியிராதளவுக்குச் சுகாதாரப் பகுதியினர் தடுப்பு நடவடிக்கைகளில் முயற்சி செய்து வருகின்றனர். (ம-)

### தணிக்கை

பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட பத்திரிகைத் தணிக்கை அமுலில் உள்ளது.

"பயங்கரவாதிகளைக் கண்டுபிடித்து

# விவசாயிகளின் ஆபரணங்களை மீட்டுக் கொடுங்கள்"

## பாராளுமன்றத்தில் கிளிநொச்சி எம். பி.

(கொழும்பு)

**"1971ம் ஆண்டு பயங்கரவாதநடவடிக்கைகளில் ஐக்கியதேசியக்கட்சிக்குத் தொடர்பிருந்ததென்று முன்னைய அரசாங்கம் குற்றம் சுமத்தியது. அந்தப்பயங்கரவாதிகளைக் கண்டுபிடித்துத்தரும்படி அந்த அரசாங்கம் ஐ. தே. கட்சியைக் கேட்கவில்லை. ஆனால் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சம்பவங்கள் தொடர்பான பயங்கரவாதிகளைப்பிடித்துத் தரும்படி எங்களை இந்த அரசாங்கம் கேட்கிறது."**

மேற்கண்டவாறு கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி நேற்று பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"பயங்கரவாதிகளைக் கண்டுபிடித்து ஏழை விவசாயிகளின் பணத்தையும் ஆபரணங்களையும் அரசினரே பெற்றுக் கொடுங்கள். இதற்கு அரசாங்கம்தான் குற்றவாளியே தவிர நாங்கள் அல்ல.

"அரசாங்கத்தில் ஒரு சிலருக்கு வாழ்க்கைச் செலவு குறைகிறது. இராணுவ வீரர்களுக்கு தலைமயிர் வெட்டுகிறது. இரவு சினிமாக் காட்சிகள் இல்லை. வாகனங்கள் கண்டபடி செல்லமுடிவதில்லை. இவற்றினால் வாழ்க்கைச் செலவு ஒரு சிலருக்கு குறைவதுதான் செய்கிறது.

"காங்கேசன்துறைத் துறைமுகம், சிமெந்து தொழிற்சாலைக்கு 100 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாகக் கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு. சிறில் மத்தியூ கூறினார். அவர் இந்த சபையில் எமது விடயம் பற்றி ஏதாவது பேசினால் அதில் விஷம் கலந்திருக்கிறது என்பதுதான் அர்த்தம்.

"காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலைக்கு ஒதுக்கப்பட்ட 100 கோடி ரூபாவையும் திருப்பி எடுத்துவிட்டு தொழிற்சாலையை மூடிவிடுங்கள். ஆனால் ஆசிரியர் பற்றாக்குறையை உடனடியாக நீக்குங்கள்" என்றார். (ம-வெ)

## யாழ். நீதவானின் அறைக்குள் சென்றவர் எச்சரித்து விடுதலை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவானின் சமாதான அறைக்குள் நேற்றுமுன்தினம் திடீரென்று நுழைந்த ஒருவரை நீதிமன்ற பொலிஸ் சார்ஜன்ட் எஸ். மாணிக்கவாசகர் பிடித்து நீதவான் திரு. ரி. ஜோகநாதன் முன்னிலையில் ஆஜர் செய்தார்.

நீதிமன்றம் கலையும்வரை அந்நபரை றிமாண்டில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

மீண்டும் அவர் நீதவான்முன் கொண்டுவந்தபொழுது, தான் தெரியாமல் நுழைந்ததாகவும் தம்மை மன்னிக்குமாறு கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து நீதவான் எச்சரிக்கை செய்து விடுதலை செய்தார். (மா)

### 58 மாணவர் தெரிவு

(கோண்டாவில்)

யாழ்ப்பாணம் பல்தொழில் நுட்ப நிறுவனத்தில் வருடா வருடம் மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவி நன்கொடைப் பணத்திற்கு 58 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## சபையில் சிதறியவை

ஆர். பி. விஜேசிறி:- உரிய வரிகளை உபாலியிடமிருந்து அறவிட்டாலே வரவுசெலவுத் திட்ட துண்டுவிழும் தொகையைச் சமாளிக்கலாம்.

ஆர். பி. விஜேசிறி:- உபாலி ஜனாதிபதியாக வரப்போகின்றார். ஆகவே எல்லாரும் அவருக்கு அஞ்சுகின்றனர். அவர் பெரும் கள்ளக்கடத்தலில் ஈடுபட்டிருக்கிறார். ஆனால் அவரை விசாரிக்க பொலிஸ் மா அதிபர் பயப்படுகிறார்.

ஆர். பி. விஜேசிறி:- உபாலி இந்த நாட்டின் தேசிய சொத்தை சூறையாடி மக்களை ஆளவிழைகின்றார். அவரிடமிருந்து அறவிட வேண்டிய வரிகளை அறவிட்டால் சாராயம் சிகரெட் போன்றவற்றின் விலைகளை உயர்த்தி சாதாரண மக்களை வருத்தியிருக்கத் தேவையில்லை.

ஆர். பி. விஜேசிறி:- லண்டனில் உபாலிக்கு 15 பந்தயக் குதிரைகள் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றையும் பராமரிக்க மாதம் 1,000 பவுணை அவர் செலவு செய்கின்றார். இந்தப் பணமெல்லாம் அங்கு அவருக்கு எப்படி கிடைக்கிறது. இந்த நாட்டு

(6-ம் பக்கம் பார்க்க)

### சுங்க ஏலவிற்பனை

கீழ்காணும் பொருட்கள் 24-11-81 செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணியளவில் யாழ்ப்பாண சுங்க அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். விற்பனையின் முழு நிபந்தனைகளும் 1954-ம் ஆண்டு மே மாதம் 28ம் திகதி வெளியிடப்பட்ட 10675-ம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையின் 1-ம் பிரிவு 2-ல் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

1 கோப்பிக் கொட்டை
2 பொலியெஸ்ரர் காற்சட்டை துணிகள்
3. றேடியோ கசெட்/ கசெட் டேப் றெக்கோடர்கள்.

ஒப்பம்,
எஸ். எம். ஜே. சேனுரட்ன,
சுங்க சேகரிப்பாளருக்காக,
யாழ் மாவட்டம்.
சுங்க அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
16-11-81 1476

### லங்காசோய் சோயா மீற்றில் புதியஉணவுப்பாக செய்முறை விளக்கம்

எதிர்வரும் 21.11.81 சனிக்கிழமை பி.ப. 1-30 தொடக்கம் யாழ். றிம்மர் மண்டபத்தில் (Trimmer Hall) டார்லிபட்லர் கொம்பனி லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பிரவேசம்: இலவசம்
அனைவரும் வருக.

1483

### பாராளுமன்றத்தில் இன்று 'றெனி' அறிக்கை

(கொழும்பு)

உபாலி விஜயவர்த்தனவைப் பற்றிப் பாராளுமன்றத்தில் ஹரிஸ்பத்துவ இரண்டாவது எம். பி. திரு. ஆர். பி. விஜேசிறி குறிப்பிட்டது தொடர்பாக இன்று காலை விசேட அறிக்கையொன்றைப் பாராளுமன்றத்தில் வெளியிடப்போவதாக நிதி, திட்டமிடல் அமைச்சர் திரு. றெனி டி மெல் தெரிவித்துள்ளார். (ம-)

### பரந்தன் இரசாயனப் பொருட்கள் கூட்டுத்தாபனம்

## அறிவித்தல்

1981 நவம்பர் 4-ந் திகதிக்குப் பின் வேலைக்குச் சமூகமளிக்காத பரந்தன் இரசாயனப் பொருட்கள் கூட்டுத்தாபன ஊழியர்கள் அனைவரும் உடனடியாகத் தமது வழமையான வேலைக்குத் திரும்ப வேண்டுமென இதனால் அறிவிக்கப்படுகிறார்கள். வழமையான வேலை என்பது வழமைபோல் தேவையேற்படுமிடத்து நியாயமான மேலதிக நேர வேலை செய்வதை உள்ளடக்கும் என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும்.

1981 நவம்பர் 25-ந் திகதி மு. ப. 8.00 மணிக்கு அல்லது அதற்கு முன் வேலைக்குச் சமூகந்தரத் தவறும் ஊழியர்கள் தமது பதவிகளிலிருந்து தாமாகவே விலகிக்கொண்டதாகக் கருதப்படுவதுடன் கூட்டுத்தாபனத்தில் தொழில்வாய்ப்புப் பெற்றுக்கொள்ள மேற்கொண்டு எதுவித உரிமையுமற்றவர்களாவார்கள்.

எம். வை. அபேவர்த்தன
தலைவர்/முகாமைப்பணிப்பாளர்
பரந்தன் இரசாயனப் பொருட்கள் கூட்டுத்தாபனம்.

1516

### மணிவாக்கு

"நாம் அறியாவண்ணம் எங்ஙனமோ நம்முடைய வாழ்க்கையினை உருவாக்கிக் கொண்டு செல்லுகின்ற ஏதோ ஒரு பேராற்றல் உள்ளது.

—ஷேக்ஸ்பியர்

# நமது நோக்கு

## மாணவர்களும் குற்றத் தடுப்பும்

நாட்டில் குற்றச் செயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவது தெரிந்ததே. இளைஞர்கள், பாடசாலை மாணவர்கள் ஒழுக்கமற்ற முறையில் தீயசெயல்களிலும் சட்ட விரோதமான குற்றங்களிலும் பெருமளவிற்கு ஈடுபட்டு வருவது விசனத்துக்குரிய விடயம். பாடசாலைகளுக்குள்ளும் உயர்கல்வி நிலையங்களுக்குள்ளும் இது புகுந்துவிடும் அச்சநிலை காணப்படுகிறது.

தனக்குரிய மதிப்பு தனக்குத் தெரியவில்லை என்பதையும் நாம் இங்கு குறிப்பிட வேண்டும். உலகில் பல வேறு நாடுகளைச் சுற்றிப் பார்த்தால் நாம் ஆறுதல் அடைய இடம் உண்டு. பல நாடுகளில் வளர்ந்தோர் குற்றம் பயங்கரவாத நிலையில் காணப்படுவது மிகச் சாதாரணமாகி விட்டது. இனக்கலவரங்கள், அரசியற் கொலைகள், பயங்கர கொள்ளைகள் போன்ற பாரிய அக்கிரமங்கள் பல நாடுகளிலும் நடைபெறுகின்றன. முதலாளித்துவ நாகரிகத்தில் மட்டும் அல்லவென்பதையும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். குண்டும் துப்பாக்கியும் சட்ட ஆட்சிக்கு சவாலாய் இருக்கின்றன.

மாணவர்கள் - பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட கட்டுக்கடங்காமல் காணப்படுவது, சுருங்கிவரும் இன்றைய உலகில் தொற்றுநோய்போல பரவி வருகிறது. விருத்தியடைந்த நாடுகளில் மாணவ குழப்பங்களும் கலவரங்களும் நாகரிக முறையில் நடைபெறுகின்றன. பாடசாலை நிர்வாகத்தை திடீரென தடைபடுத்துதல், பகிஷ்கரிப்பு, மறியல் செய்தல் போன்ற நடவடிக்கைகள் எடுத்ததற்கெல்லாம் கையாளப்படுகின்றன.

வளர்ச்சியடையும் நாடுகளில் இவை காட்டுமிராண்டித்தனமான வன்செயல்களாக தோற்றமளிக்கின்றன. யாழ்ப்பாணத்திலிருந்து உயர் சம்பளம் தேடிப்போன பல ஆசிரியர்கள் நைஜீரியா தேசத்தில் சில ஆட்சிகளிலுள்ள பாடசாலைகளில் மாணவர்கள் தீவைத்து, கல்லெறிந்து, அதிபரையும் ஆசிரியர்களையும் பாடசாலைக்குள்ளே பணயம் வைத்தல் போன்ற மாணவ அக்கிரமங்களைக் கண்டு அதிர்ச்சியடைந்ததாகத் தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

மாணவ சமூகத்தைப் பீடித்திருக்கும் இக்கொடிய நோய் எமது நாட்டில் பரவாதிருக்கத்தக்க நடவடிக்கைகள் தேவை. அதற்குரிய காரணங்களை ஆராய்ந்து செயற்படுவது அவசியம்.

இன்றைய தலைவர்களாக நாம் வாழ்ந்து நாட்டு வளம் அறியாதிருந்தால் மிகச்சிறிய குற்றங்களுக்கும் மிகப்பெரிய தடுப்பு நடவடிக்கைகள் தண்டனைகளின் தன்மைகளைப்போட்டு உடைக்க நேரிடும். நிலைமை மோசமாகும்.

இந்தப் பின்னணியில் நாட்டின் கல்வி அமைச்சர் 'குற்றத்தடுப்பு' என்பதை ஒரு பாடமாகப் பாடசாலைகளில் வருகிற வருடம் தொடக்கத் திட்டமிடுவது வரவேற்கத்தக்கது.

பழைய சமூகத்தில் ஒழுங்குபட்ட அமைதியான வாழ்வுக்கு ஆபத்து அதிகரித்து வருவதால் வருங்கால பிரஜைகளான இன்றைய மாணவர்கள் பருவத்திலேயே பயிற்சி செய்யப்பட வேண்டியவர்கள்.

நாமொரு சிறிய அழகான தீவில் வாழும் மக்கள். இயற்கைவளப்பும் பாதுகாப்பும், மனிதவளமும், நாற்பெருஞ் சமயப் பண்பாடும் நிறைந்த நாடென்ற காரணத்தினால் உலகரீதியில் எங்கள் நாட்டின் நிலைமை கட்டுப்படுத்தக் கூடியது.

இதற்கு ஆதாரமான முக்கிய கருத்தை அரசும் கல்வி அமைச்சும் பாடசாலைச் சமூகமும் விழிப்புடன் ஆராய்வது விரும்பத்தக்கது. அது என்ன? வெறும் அடக்கு முறைகள் எவ்வித பயனும் அளிக்கமாட்டா. சட்டத்தை நிலைநாட்ட வேண்டுமானால் அச்சட்டத்தின் தாற்பரியத்தை காரண-காரிய, பகுத்தறிவு முறையில் மாணவர்களுக்கு விளக்கவைக்க வேண்டும்.

பிஞ்சு உள்ளங்கள் புரியக் கூடியதெல்லாம் பசுமரத்தாணி அறைந்தாற்போல் மனதிற் பதிந்துவிடும். இதற்கு உரமூட்டுவது போன்றதே பெரியோர்களின் முன்மாதிரி.

பாடசாலை நேரத்தில் ஆசிரியர்கள் ஹோட்டல் பாரில் காணப்பட்டால் மாணவர்கள் அது ஒரு பாரதூரமான காரியமெனக் கொள்வார். "தலைமுறை இடைவெளி" என்று இன்று கல்விமான்கள் ஜெபிக்கும் மந்திரத்தின் அர்த்தம் என்ன?

வேகம் மாறிவரும் வாழ்க்கைமுறையில் பத்துவருடங்களுக்குமுன் நடைமுறையில் இருந்த வழக்கங்கள், பழக்கங்கள் பல குடிபோய் விட்டன. தூசுபிடித்த, உழுத்துப்போன கண்மூடி வழக்கங்களைக் கைவிட்டு என்றும்மாறாத ஒழுக்க நெறியை இன்றைய சூழ்நிலைக்கு உகந்தமுறையில் பெரியோர் கடைப்பிடிக்க வேண்டும்; மாணவர்கள் பின்பற்ற முயல்வார்.

ஆசிரியர்களின் மதிப்பான வாழ்வு நூறு 'குற்றத் தடுப்பு' பாடங்களுக்குச் சமமாகும். சமயபாடம் பாடசாலைகளில் செவ்வனே நடைபெற்றபோதும் மாணவர்கள் சமய ஒழுக்கத்துக்கு எவ்வளவு தூரத்தில் காணப்படுகின்றனரோ, அதுபோல் குற்றத்தடுப்பு, பாடசாலைகளில் ஒரு பிரத்தியேகமான பாடமாக செவ்வனேயே போதிக்கப்பட்டாலும், சமூக ரீதியில் கணிசமான அளவுக்கு நல மாற்றம் காண முடியுமென்பது முயற்கொம்பு.

திறமைமிக்க ஆசிரியர்களின் ஆளுமையில் ஒழுக்க வாழ்வு செழித்திருந்தால் அப்பாடசாலை சமய சார்பில் செழித்தவர்களும் பாடசாலையென்பது முடிவு.

அதேபோல் பாடசாலை சமுதாயத்தில் ஒழுங்குபட்ட, சட்டத்துக்குக் கட்டுப்பட்ட, அமைதியான ஆசிரிய மாணவ சமூகம் முளைக்கத் தொடங்கிவிட்டால், முளைக்க உதவுமானால் இவ்விதப்பயிற்சி பயனளிக்கும்.

---

# "ஆங்கிலத்தை அரசகருமமொழியாகவும் அங்கீகரிக்க வேண்டும்"

## ஜனாதிபதிக்கு யாழ். ஆயர் மகஜர்

(உடுப்பிட்டி)

"ஒரு சர்வதேச மொழி என்ற ரீதியிலும் இனங்களுக்கிடையே பரஸ்பர ஒற்றுமையையும், நம்பிக்கையையும் உருவாக்கக்கூடிய இணைப்புமொழி என்ற முறையிலும் ஆங்கில மொழிக்குக் கல்வி வெள்ளை அறிக்கையில் முக்கியத்துவம் வழங்கப்பட்டதை ஒருசிறப்பு அம்சமாக வரவேற்கும் அதே வேளையில் அம்மொழியை நிர்வாகத்திற்குப் பயன்படக்கூடிய அரசகரும மொழியாகவும் பிரகடனப்படுத்தவேண்டும் என வலியுறுத்துகின்றோம். மாணவர் மத்தியில் ஆங்கில மொழி தொடர்பாக மண்டிக்கிடக்கும் ஆர்வத்தைத் தூண்டிவிடுவதற்கு இது ஒரு சிறந்த வழியாகும் எனக் கருதுகிறேன்.

இவ்வாறு யாழ்ப்பாண மேற்றிராணியார் அதி. வந். கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை கல்வி வெள்ளை அறிக்கை சம்பந்தமாக ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன, பிரதமர் திரு ஆர். பிரேமதாஸா, கல்வி அமைச்சர் திரு ரனில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர்கள், கொழும்பு அதிமேற்றிராணியார் அதி வந். நிக்கொலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை, பல்கலைக் கழகங்களின் உபவேந்தர்கள் ஆகியோருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் தெரிவித்துள்ளார்.

பிரஸ்தாப மகஜரில் யாழ் மேற்றிராணியார் தெரிவித்துள்ளதாவது:

"கல்வி வெள்ளை அறிக்கையில் மத போதனைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படாமை ஏமாற்றத்தையும் வருத்தத்தையும் அளிக்கிறது.

"1977ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4ம் திகதி வெளியிடப்பட்ட அரசின் கொள்கை விளக்கத்திற்கும், போசட பிரேமரத்தின கல்விச் சீர்திருத்தக் குழுவின் சிபார்சுகளுக்கும் இது முரணாகவுள்ளது என்பதை வலியுறுத்தவேண்டியுள்ளது.

"தற்போது கட்டாய பாடமாகவுள்ள சமயத்தை ஜி. சி. ஈ. பரீட்சை மையப்பாடங்களிலிருந்து நீக்கிவிடுவது ஒரு பிற்போக்கான செயல் என்றும் இதனால் விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படலாம் என்றும் கருதவேண்டியிருக்கிறது.

"பல்கலைக் கழகங்களைப் பொறுத்தவரையில் சுயாதீனமான முறையில் தங்கள் புகுமுகப் பரீட்சைகளை நடாத்தி திறமை அடிப்படையில் மாணவர்களைத் தெரிவுசெய்யும் அதிகாரம் வழங்கப்படவேண்டியது அவசியமானதாகும்."

(அ)

---

# "கூட்டுப்பாடசாலை முறை: சிறுபான்மையினரிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது"

## வெள்ளை அறிக்கைபற்றிய கருத்தரங்கில் வைத்திலிங்கம்

(உடுப்பிட்டி)

கல்வி வெள்ளை அறிக்கையில் இருக்கும் கூட்டுப் பாடசாலை முறை சிறுபான்மையினரால் குறிப்பாக முஸ்லிம்களாலும், தோட்டத் தொழிலாளர்களாலும் அவநம்பிக்கையுடனும், கவலையுடனும் நோக்கப்படுகின்றன. இம்முறையின் மூலம் இச் சிறுபான்மையினர் தங்கள் தனித்துவத்தை இழக்க வேண்டி நேரிடலாம் என்ற அச்சம் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் இவ்வித இணைப்பு முறையில் வேறுபட்ட ஒரு போதனா மொழியைக் கொண்ட ஒரு பாடசாலை பொருத்தமற்றதாகக் கணிக்கப்படும்.

இவ்வாறு முன்னாள் உரும்பிராய் இந்துக் கல்லூரி அதிபரும் தொழிற்சங்கவாதியுமான திரு. அ. வைத்திலிங்கம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கல்வி வெள்ளை அறிக்கை பற்றிய கருத்தரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மகாவித்தியாலய அதிபர் திரு. கே. குணரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் திரு. வைத்திலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

பல இனங்கள் வாழும் ஒரு நாட்டில் உபயோகிக்கப்படும் பாடநூல்கள் சமுதாய, சாதி, மத வேறுபாடுகளைப் பிரதிபலிக்காது தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்ப உதவக் கூடியனவாக இருக்கவேண்டும். எங்கள் பல்கலைக்கழகங்களில் மொழிகளின் திணைக்களமென இருப்பதை மாற்றி பிறமொழிகளின் திணைக்களமென அமைத்து அங்கு ஐக்கிய நாடுகள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சகல சர்வதேச மொழிகளும் கற்பிக்கப்படல் வேண்டும்.

"வெள்ளை அறிக்கையில் முதல் மொழி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது குழந்தையின் தாய்மொழியையோ அன்றி பெற்றோர் விரும்பும் போதனா மொழியோ என்பது தெளிவாகவில்லை. மேலும் வெள்ளை அறிக்கையில் ஆங்கிலம் பல்வேறு மொழிபேசும் மக்களிடையே ஓர் இணைப்பு மொழியாக இருக்குமென

(6ம் பக்கம் பார்க்க)

---

## நூல் விமர்சனம்

# வாணிகச் சட்டம்

[ஆங்கிலம்]

நூலாசிரியர்:
கா. பாக்கியலிங்கம்.

வாணிகச் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை ஒரே ஏட்டில் மாணவர்கட்கு வழங்கும் நோக்குடன் எழுதப்பட்ட கச்சிதமான இந்நூல் சந்தேகமின்றி ஆசிரியரின் நோக்கத்தை பூர்த்திசெய்கிறது. கணக்கர் துறைத் தேர்வுகளுக்குத் தோற்றும் மாணவர்களுக்கெனவே தனி சிறப்பாக எழுதப்பட்டிருப்பினும் இந்நூல் வாணிகச் சட்டத்தை ஒரு பாடமாகக்கொண்ட மற்றைய தேர்வுகளுக்குத் தோற்றும் மற்றைய மாணவர்கட்கு வெகுவாகப் பயன்படும் என்பது மட்டுமல்லாமல் ஒப்பந்தச்சட்டம், சரக்குகள் விற்பனைச்சட்டம், பயனீட்டாளர் கடன் தவணைச் சலுகைச் சட்டம் (1974) வாடகைத் தவணைக் கொள்வனவுச் சட்டம், வாணிகத்துறை பிரதிநிதிச்சட்டம், தொழில் கொடுப்போர் தொழில் செய்வோர் சட்டம், பொல்லாங்கு குற்றச்சட்டம் ஆகியவற்றோடு சட்டத்தின் தோற்றுவாய்களும் சரித்திரமும் நீதிமன்றங்களின் அமைப்புமுறை ஆகியன சம்பந்தப்பட்ட சட்ட அடிப்படைகளைக் கற்றுக்கொள்ள வேண்டிய சமயம் தெரிந்துகொள்ள விரும்பும் மற்றையோருக்குங்கூட மிகவும் பயன்படக்கூடிய நூலாகும். மிகமுக்கியமான வழக்குகளும் சம்பந்தப்பட்ட எழுத்து வடிவச் சட்டங்களும் குறிப்பிடப்பட்டிருப்பதுடன் அவை நூலாசிரியரின் அக்கறையான கவனத்தை ஈர்த்திருக்கின்றன.

வெகுவாக வாசிப்பதற்கினிய முறையில் அளிக்கப்பட்டிருக்கும் வளம் பொருந்திய தகவல்களைக் கொண்டுள்ளது இந்நூல், செயல்முறை சார்ந்ததாகும். இந்நூல் இலங்கையில் சரித்துக்கொள்ளக்கூடியது வாணிகச் சட்டத்தின் முழுப் பரப்பைக் கொண்டிருந்தும் அது இலகுவில் தகவல் பெறும் தன்மையதாயுள்ளது. எந்தவொரு தலைப்பைபற்றியும் வேகமாகவும் இலகுவாகவும் தகவல் பெற்றுக்கொள்ள அதன் ஒழுங்குமுறை இடமளிக்கிறது.

திரு. கா. பாக்கியலிங்கத்தின் ஆசிரியத்தொழில் கணக்குநர் தொழில் ஆகியவற்றின் மிகுந்த அனுபவம் இந்நூலில் பிரதிபலிக்கின்றன. அதன் இன்றையவெளிவருகை முக்கியமாக, வாணிகச் சட்டத்தின் சிறப்பான தலைப்புகளெல்லாவற்றையும் தெரிந்தெடுத்துக் கலந்தாராயப்படுமுள்ள தனி நூலொன்றைத் தேடும் மாணவர்களால் வெகுவாக வரவேற்கப்படவேண்டியதொன்றாகும். இந்நூலின் ஆக்கத்திற்கு மிகுதியான நேரமும் உழைப்பும் செலவிடப்பட்டிருப்பது வெளிப்படையாகத் தெரிகிறது. தெரிந்துகொள்ளும் ஆர்வமுள்ள இளைஞர்கள் இதனால் பயனடைவார்கள் என்பது உறுதி.

ஜி. எவ். சேதுகாவலர்.

---

# லயன்ஸ்கழக கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

லயன்ஸ் கழகத்தாரின் பிராந்தியக் கருத்தரங்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 22ந் திகதி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

காலை 9மணிக்கு ஆரம்பமாகும் இக் கருத்தரங்கில் மாவட்ட ஆளுநர் லயன். சுனில் வத்தல தம்பதிகள் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள்.

லயன்ஸ்கழகப் பிரமுகர்களான, பேராசிரியர். வி. கே. கணேசலிங்கம் டாக்டர் யோகு பசுபதி, திரு ரெட்ண பாலசிங்கம், திரு ரசல் அனுவிஹார, பேராசிரியர் பி. கே. பெர்னாண்டோ, திரு. நவர் டி. குறூஸ் ஆகியோர் இக் கருத்தரங்கில் கருத்துரை வழங்குவார்கள். (வெ)

---

# இன்று பரிசுகள் வழங்கப்படும்

[யாழ்ப்பாணம்]

வண்ணை சந்தையடியில், ஸ்ரீ கற்பகவிநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக்கழகம் ஆறுமுக நாவலர் நினைவு விழா சார்பாக நடத்திய சைவ வினா விடை மனனப் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கு இன்று நடைபெறவிருக்கும் நாவலர் விழாவில் பரிசுகள் வழங்கப்படவிருக்கின்றன. (க)

# நவம்பர் 25ம் திகதிக்கு முன் வேலைக்கு வரவேண்டும்

## பரந்தன் இரசாயன கூட்டுத்தாபன ஊழியர்களுக்குக் காலக்கெடு

யாழ்ப்பாணம்

பரந்தன் இரசாயன கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு இம்மாதம் 25ம் தேதி காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது. அன்று காலை 8மணிக்கு முன்னர் வேலைக்கு திரும்பாதவர்கள் வேலையிலிருந்து தாமாகவே நீக்கப்பட்டதாக கருதப்படுவார்கள்.

பரந்தன் ரசாயன தொழிற்சாலை ஊழியர்கள் இம்மாதம் 4ந் தேதிமுதல் வேலைக்கு செல்லாதிருக்கின்றனர்; கடந்த 2 வாரங்களாக தொடர்ந்து ஊழியர்கள் வேலைக்கு செல்லாதிருந்தனர்.

பரந்தன் ரசாயன கூட்டுத்தாபன மா அதிபர் இம்மாதம் 4ம் தேதி வேலைக்கு சமுகமளிக்காத சகல ஊழியர்களையும் உடனடியாக வேலைக்கு திரும்புமாறு அறிவித்துள்ளார். அவர்களுக்கு மேலதிகவேலைக்கான ஊதியம் வழங்கப்படுமெனவும் அறிவித்துள்ளார்.

இம்மாதம் 25ம் திகதி காலை 8 மணிக்கு முன்னர் வேலைக்கு திரும்பாதவர்கள் தாங்களாகவே வேலையிலிருந்து நீக்கியவர்களாக கருதப்படுவார்களென்றும், கூட்டுத்தாபனத்தின் சகல தொடர்புகளையும் துண்டித்துக்கொண்டவர்களாகக் கருதப்படுவார்களென்றும், மேலும் அறிவித்துள்ளார். (க)

உரும்பிராயில்

## வெட்டுக்காயங்களுக்கு வாழை வியாபாரி பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மாட்டு வண்டில் மூலம் வாழைக்குட்டிகள் விற்பனை செய்யும் வயோதிபர் ஒருவர் நேற்று வெட்டுக்காயங்களுக்கு பலியாகியுள்ளார்.

உரும்பராயைச் சேர்ந்த வாழைக்கன்று வியாபாரியான ஞானமுத்து திருச்செல்வம் (வயது 70) என்பவரே பலியானவராகும்.

இவரது சடலத்தை வீட்டிலிருந்து சுமார் ஒருமைல் தூரத்திற்கு அப்பால் கண்டுபிடித்தனர்.

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொன் சுதுனேந்திரன், சம்பவம் நடந்த இடத்திற்குசென்று விசாரணை நடத்தினர்.

சந்தேகநபரான செல்லன் நடேசன் என்பவர் தலைமறைவாகிவிட்டதாகக் கூறப்படுகிறது. (மா)

## மரண அறிவித்தல்

### திருமதி பா. சிவராஜேஸ்வரி

திருமதி பா. சிவராஜேஸ்வரி 16-11-81 அன்று காலமானார். இவர் பாலசிங்கம் தரசிவத்தின் அன்பு மனைவியும் புனிதவதி, சிவகுனேந்திரன் (ஹட்டன் நசனல் வங்கி யாழ்ப்பாணம்) செல்வவதி (Bahrain) ஞானேந்திரன் (இலங்கை வர்த்தகவங்கி கொழும்பு) விசாகேந்திரன், சண்முகேந்திரன் ஆகியோரின் அன்புத்தாயாரும் சப்பையா (சுங்க இலாகா) ஜெயராஜசேகரம் (Bahrain) அருந்தவராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரது ஈமக்கிரியைகள் 10, இலந்தைக்குளம் வீதி, கொழும்புத்துறையில் நாளை சனிக்கிழமை (21-11-81) காலை 8 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். 1508


## வெளிநாடு பயணமா?

உலகின் எப்பாகத்துக்கு செல்லவேண்டுமானாலும்

யாழ்ப்பாணத்தில் எமக்கை நாடுங்கள்.

நம்பிக்கையான, பிரபல்யம் வாய்ந்த MACKINNON MACKENZIE & Co of CEYLON LIMITED ன் யாழ்ப்பாணக்கிளை

விரும்பிய விமானத்தில் ஆகக்குறைந்த கட்டணங்களில்

விமான டிக்கட்டுகள்

சிங்கப்பூர் (ஒரு வழி) கூட்டாக செல்வோருக்கு மேலும் விசேட கழிவு வழங்கப்படும்.

இலங்கையில் AMERICAN EXPRESS பிரதிநிதித்துவம் பெற்ற மக்கினொன்னின் இடம் வங்கியில் அறவிடப்படும் அதே கட்டணத்தில் (TRAVELLER CHEQUES) பிரயாண காசோலைகள் பெற்றுக்கொள்ளலாம்

★ நைஜீரியன் விசா

நைஜீரிய டிக்கட் எம்மிடம் பெறுவோருக்கு மேலும் குறைந்த கட்டணத்தில் விசா பெற்றுத்தரப்படும். தொடர்பு கொள்க:

## மக்கினொன்ஸ் ட்றவல் சேர்விஸ் (சிலோன்) லிமிட்.

8, பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணம்.

த. பெ. எண்: 92 தொலைபேசி 8154


## இன்று கரோல் ஆராதனை

(அரியாலை)

வடபிரதேச இளைஞர்களும் யுவதிகளும் கலந்து கொள்ளும் 34வது வருடாந்த கிறிஸ்மஸ் கரோல் பாட்டு ஆராதனை இன்று மாலை 5 மணியளவில் யாழ். பரி. யோவான் கல்லூரி பீற்றோ ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது (அ)

### அசாமில் வேலைநிறுத்தம்

கௌஹாத்தி, நவ. 19

வட இந்திய மாநிலமான அசாமில் நேற்று 36 மணித்தியால பொது வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இதனால் அங்கு சகல அரசாங்க அலுவலகங்களும் ஸ்தம்பிதம் அடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (வெ)

### கூட்டுப்பாடசாலை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்பட்டது. ஆங்கில மொழியைப் படித்துணர்ந்து அதில் திறமை பெறக் கூடியவர்கள் இந்நாட்டில் மிகச் சிலரே உள்ளனர். ஆகவே அண்டைநாடான இந்தியாவில் உள்ளது போல மும்மொழித் திட்டத்தை இலங்கையில் நடைமுறைப்படுத்துவது வரவேற்கத் தக்கதாகும்.

"மூன்றாம் தரத்திலிருந்தே சிங்களக் குழந்தைகள் தமிழும், தமிழ்க்குழந்தைகள் சிங்களமும் படிப்பதுடன் 8ந் தரத்தில் இருந்து ஆங்கில மொழியையும் கற்கலாம்.

"கல்வியின் நோக்கம் சகல பிள்ளைகளுக்கும் கல்வி அறிவை வழங்குவதுடன் அவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கக்கூடியதாகவும் இருக்கவேண்டும். இதன் தொடர்பாக மாணவர்களின் மதிப்பீட்டு வேலை அதற்கென விசேஷமாகப் பயிற்றப்பட்ட ஆசிரியர்களிடம் ஒப்படைக்கப்படவேண்டும். அதேபோல சகலருக்கும் வேலைவாய்ப்பு வழங்கக்கூடியவகையில் சமுதாய அமைப்பும் மாறவேண்டும். இவ்வகையில் இத்திட்டம் வெற்றியளிக்க முடியாது" என்றார்.

ஆசிரியர் திரு கே. சிதம்பரப்பிள்ளையும் பேசினார். (ம)

'குரு'வை காட்டிய வருக்கு

## 600ரூபா அபராதம் ஒளிப்பதிவு நாடா பறிமுதல்

சாவகச்சேரி

சாவகச்சேரியில் அனுமதியின்றி வீடியோ மூலம் 'குரு' படத்தை காட்டியவருக்கு 600 ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் ஒளிப்பதிவு நாடாவும் பறிமுதல் செய்யப்பட்டது.

இவ் வழக்கு சாவகச்சேரி பதில் நீதிபதி சி. பாலகிருஷ்ணர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

அனுமதியின்றி வீடியோ மூலம் 'குரு' படம் காட்டியதாக சாவகச்சேரியை சேர்ந்த வேல் பீதாம்பரம் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

கடந்தமாதம் அனுமதிப்பத்திரமின்றி மதுரையை மீட்ட சுந்தரபாண்டியனை வீடியோ மூலம் காட்டியதற்காக இதே நபருக்கு 500ரூபா அபராதம் விதிக்கப்பட்டிருந்தது. (க)

பெண்களை பிணையெடுக்க

## வந்தவர்களுக்கு இரத்த பரிசோதனை!

(யாழ்ப்பாணம்)

றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த இரு பெண்களை பிணையில் அழைத்துச் செல்லவந்த இருவரை யாழ். நீதவான் திரு ரி. ஜேகநாதன் இரத்த பரிசோதனைக்குட்படுத்தியுள்ளார்.

யாழ். நகரில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியதாக இருபெண்கள் மீது யாழ் பொலிசாரால் குற்றம் சுமத்தப்பட்டு யாழ் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டிருந்தனர்.

இவ்விரு பெண்களும் பருத்தித்துறையையும், கொண்டாவிலையும் சேர்ந்தவர்களாவர்.

றிமாண்டில் இருக்கும் இவ்விரு பெண்களையும் கதும்பையைச் சேர்ந்த இருவர் நேற்று பிணை எடுக்க வந்திருப்பதை அறிந்த நீதவான், இருவரையும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு, நீதிமன்ற பொலிஸ் சார்ஜன்ட் எஸ். மாணிக்கவாசகருக்கு கட்டளை இட்டார்.

இருவரும் நீதிபதிமுன் ஆஜர் செய்யப்பட்டபோது இருவரும் ஆஸ்பத்திரியில் இரத்த பரிசோதனை செய்து, டிசம்பர் 4ம் திகதி அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார்.

குடும்பகாரராக நீங்களிருப்பதால் உங்களின் நன்மை கருதித்தான் இரத்த பரிசோதனை செய்யுமாறு உத்தரவிடுகிறேன் என்று நீதவான் புத்திமதி கூறினார். மா

### ரூ. 250 அபராதம்

(சாவகச்சேரி)

அனுமதிப்பத்திரமின்றி மரம் கொண்டுசென்றதாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரிகளுக்கு தலா 250 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இவ் வழக்கு சாவகச்சேரி நீதிபதி திரு கி. வி. விக்னேஸ்வரன் முன்னிலையில் நடைபெற்றது.

### சபையில் சிதறியவை—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பணம்தான் அங்கு செலவழிக்கப்படுகிறது. வசந்தா, கார்மென், மேரியின், நடராஜா போன்ற பெயர்களை அவர் தனது குதிரைகளுக்கு சூட்டியிருக்கின்றார்.

ரோனி டி மெல்:- இவை குதிரைகளின் பெயர்களா அல்லது வயவன்களின் பெயர்களா.

ஆர். பி விஜேசிறி:- இரண்டும்தான் அவரது இரண்டுகால் குதிரைகளின் பெயர்கள் தான் நான்கு கால் குதிரைகளுக்கும் சூட்டப்பட்டுள்ளன. (ம-வெ)


## ஹோம் பினான்ஸ் லிமிட்.

உங்கள் வசதிக்காக சிறந்த பொருட்களை நாம் விற்பனை செய்கிறோம்.

★ Pedestal - மின்விசிறிகள் 16"

★ Phoenix (CHINA) - சைக்கிள்கள்

★ Home Mate (JAPAN) - மணிக்கு 1000 கலன் நீர் இறைக்கும் மின்சார இயந்திரம்

மாதா மாத கட்டுப்பண முறையிலும் கொள்வனவு செய்யலாம்.

விபரங்கட்கு:

ஹோம் பினான்ஸ் லிமிட்,

82, கன்னாதிட்டி வீதி,

யாழ்ப்பாணம்.

போன்: 8310


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிடெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 303-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச அச்சகத்தில் 1981ம் ஆண்டு நவம்பர் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as News Paper, The General P. O. Sri Lanka Regd.Q. B. 100286/81, P. O. Box 49. Jaffna. தொலைபேசி 7707, 889, 8186.